செ.வெ.எண் : 02/ஜூன் நாள் : 02.06.2017

**இராமநாதபுரம் மாவட்டம்**

## இராமநாதபுரம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 2017-2018 கல்வியாண்டிற்கு பல்வேறு தொழிற்பயிற்சி பிரிவுகளுக்கு விண்ணப்பித்தலுக்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

இராமநாதபுரம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் 1.பொருத்துநர் (Fitter), 2.கம்மியர் மோட்டார்வண்டி (MMV), 3.கம்பியாள் (Wireman), 4.கம்மியர் மின்னணுவியல் (Elec.Mechanic), 5.இயந்திரப்பட வரைவாளர் (D.Man.Mechanical), 6.கம்மியர் குளிர்பதன தொழிற்பிரிவு (MR A/C), 7.மின்சாரப்பணியாளர் (Electrician), 8.டெஸ்க் டாப் பப்ளிசிங் (DTPO), 9.தையல் தொழில்நுட்பம் (Sewing Technology), ஆகிய தொழிற்பிரிவுகளுக்கு 2017 ஆம் ஆண்டு ஆன்லைன் (Online) மூலம் சேர்க்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கண்ட தொழிற்பிரிவுகளுக்கு 8ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற ஆண் / பெண் இருபாலரும் www.skillstrining.tn.gov.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்கலாம். முன்னதாக ONLINE ல் விண்ணப்பிக்க கடைசி நாளாக அறிவிக்கப்பட்டிருந்த 31.05.2017 என்ற கால அவகாசத்தினை தற்பொழுது 15.06.2017 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மேலும் விபரங்களுக்கு முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் இராமநாதபுரம் அவர்களை தொலைபேசி எண் **04567-231214** ல் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**